# வ. உ. சிதம்பரனாரின்
# கடிதங்கள்

1902 — 1936.

தூத்துக்குடி,
10--10--02.

திருச்செந்தூர்.

சுவாமியவர்கள் சமுகத்துக்கு அடியேன் சிதம்பரம் அனேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன். தாங்கள் ஒரு வாரத்துக்குள் பணத்தை யனுப்புவதாயிருந்த கார்டு வந்து இப்போது இரண்டு வாரமாகியும் பணம் வரவில்லை. நான் எவ்வளவோ ஆத்திரப் பட்டுத் தங்களுக்குக் கடிதங்கள் எழுதியும் ஒரு பிரயோஜனமுமில்லை. இது பார்த்தவுடனே பணம் தயாராய் விட்டதா, இல்லையா என்ற விபரத்துக்குப் பதிலெழுதும்படி பிரார்த்திக்கிறேன். இவ்விதம் நான் கடத்துவது தங்களுக்கு நியாயமாயிருந்தால் சரி. தங்களுடைய பதிலையும் மணியார்டர் வரவையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

(ஓம்) வ.உ.சிதம்பரம்.

மகாஸ்ரீ மகா ~~க~~கனம் பொருந்திய அம்மான்,
தி.கு.ஞானதேசிகம் பிள்ளையவர்கள் சமுகத்துக்கு,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

தூ த்துக்குடி,
11--7--03.

சுவாமியவர்கள் சமுகத்துக்கு அடியேன் சிதம்பரம் விண்ணப்பம். க்ஷேமம். ~~கோர~~க்ஷேமத்துக்குப் பதில் உத்திரவாகப் பிரார்த்திக்கிறேன். தங்களுடைய ரெவினியூ பெற்றிஷனை இங்கிலீஷில் தயாரித்து சப் கலெக்டரவர்களிடம் கொடுத்தாய் விட்டது. வாயிதாவைப் பிந்தித் தெரிவிக்கிறேன். தங்களிடம் ரு 1500-0-0 தற்சமயம் வந்திருப்பதாய்ச் சரியான மனுஷாள் மூலமாய்க் கேள்வியுற்றேன். ஆதலினால் இது பார்த்தவுடனே எனக்கு வேண்டிய ரூபாய் பூராவையும் பீற்றர் பிள்ளையவர்களிடம் செலுத்தி தங்கள் நோட்டை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். இந்தத் தடவையும் தாங்கள் பணம் செலுத்தாமலிருந்துவிடக் கூடாது. விசிதமும் யாந்தவ்வியமும் குறையாதிருக்க வேண்டுமென்பது என் கருத்து. தாங்களும் அதைக் கவனிக்க வேணும். உடனே பதில் எழுதுங்கள்.

தாழ்மையுள்ள,
(ஓம்) வ. உ. சிதம்பரம்.

தூத்துக்குடி,
13--8--03.

சுவாமியவர்கள் சமுகத்திற்கு அடியேன் சிதம்பரம் விண்ணப்பம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பதில் எதின் எழுதப் பிரார்த்திக்கிறேன். தங்களுடைய மரியாதையையும், அந்தஸ்தையும் பூராவாகக் கெடுத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணமும் நாங்கள் ஒருவரும் இனிமேல் ஒருநாளும் உங்கள் வீட்டுக்கு வரக்கூடாது என்ற எண்ணமும் தாங்கள் கைக்கொண்டிருக்கிறதாய்த் தெரிகிறது. எத்தனை வாயுதாக்கள் வைத்தீர்கள். என்னமெல்லாம் எழுதினீர்கள். இப்படிக்கான மனுஷாளை நான் இதுவரை பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. உடனே பணத்தை அனுப்ப வேணும். அல்லது 18 -ல் அவ்விடம் வருகிறேன். அதற்குமுன் பணம் தயாரித்து வைத்திருக்க வேணும். மரியாதை என்பது கிஞ்சித்துமில்லையே!

(ஓம்) வ. உ. சிதம்பரம்.

----

தூத்துக்குடி.
26--8--03.

சுவாமியவர்கள் சமுகத்திற்கு அடியேன் சிதம்பரம் விண்ணப்பம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன்.

தங்களுக்கு எனக்குத் தாங்கள் செல்ல வேண்டியிருக்கிற பணம் விஷயமாயெழுதுகிற கடிதம் இதுதான் கடைசி. நானும் உங்களுடைய பொய்யான பல வாயுதாக்களை நம்பி இதுவரை மோசம் போனேன். உலகத்தில் இத்தகைய மனுஷாளுமிருப்பார்களென்று தெரியவனாய்ப் போய்விட்டேன். செப்டம்பர் மீ 5 உக்குள் சூட்டுத் தாக்கல் செய்வது பிரமாணம். அதற்கு முன்பணம் அகப்பட்டால் அனுப்புங்கள். வேறு பதில் ஒன்றும் வேண்டுவதில்லை. உங்களுடைய வாயுதாக்களை இனிமேல் நம்பப் போறதில்லை. இது பிரமாணம்.

(ஓம்) வ. உ. சிதம்பரம்.

மகாஸ்ரீ மகாகனம் பொருந்திய அம்மான்,
தி. கு. ஞானதேசிகம் பிள்ளையவர்கள் சமுகத்துக்கு,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

V.O.Chidambaram Pillay.

1, Kandappa Pillai St.,
Perambur,
2--8--17.

சுவாமியவர்கள் திவ்விய பாத கமலங்களில் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன். சுவாமியவர்கள் கடிதம் பெற்றேன். சுவாமியவர்கள் சஷ்டி பூர்த்தி சிறப்பாக நடந்தேறும்படி கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

சிரஞ்சீவி பிச்சையாவின் விவாகத்தைத் திருச்செந்தூரில் சுவாமியவர்கள் கிருகத்தில் நடத்தலாமாவென்பதை உடனே எனக்குத் தெரிவிப்பதுடன், சிரஞ்சீவி [redacted] பிச்சையாவின் ஜாதக நகல் ஒன்றை எனக்கு அனுப்புவிக்குமாறும் பிரார்த்திக்கிறேன். ஜாதகம் இல்லையென்றால், அவன் ஜனன நக்ஷத்திரத்தை எனக்குத் தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

(ஓம்) வ. உ. சிதம்பரம்.

மகாகனம் பொருந்திய அம்மான்,
மகாளஸ்ரீ கு. ஞானதேசிகம் பிள்ளையவர்கள்,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

V.O.Chidambaram Pillai

1, Kandappa Pillai Street,
Perambur, Madras.
29--8--1917.

சுவாமியவர்கள் திவ்விய பாத பொற்கமலங்களில் அடியேன் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன். சுவாமியவர்கள் கார்டு இரண்டும் வரப்பெற்றேன். சுவாமியவர்கள் அபிப்பிராயப்படியே வருகிற ஐப்பசி மாதத்தில் ஒரு முகூர்த்தம் குறிப்பிட்டுத் தெரிவிக்கிறேன். அவ்வாறே எனது தமக்கைக்கும் தெரிவித்து விடுகிறேன். இது நிற்க. ஆத்தூர்த் தம்பிமார்கள் என்ன சொன்னார்கள்? ஒவ்வொருவரும் எத்தனையெத்தனை ரூபா தருவதாகச் சொன்னார்கள்? கையில் பொருளில்லாத நானும் சுவாமியவர்களும் என்ன செய்வது? கையில் பணமுள்ள தம்பிமார் இருவரும் மைத்துனனுக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டுமே யென்று நினைத்தாலன்றோ காரியம் விரைவில் முடியும்?

தாழ்மையுள்ள,

(ஒம்) வ.உ. சிதம்பரம்.

கோவிற்பட்டி,
17--10--27.

சுவாமியவர்கள் திவ்விய பாத பொற்கமலங்களில் அடியேன் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன்.

வருகிற கந்தசஷ்டி விசேஷ காலத்தில் கோயமுத்தூர் வக்கீல் சுப்பிரமணிய முதலியாரவர்கள் குடும்ப சகிதம் வந்து திருச்செந்தூரில் தங்க வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்தாருடன் என் குடும்பத்தாரும் அங்கு வந்து தங்கி சுவாமி தரிசனம் செய்து வரலாமென்று நினைக்கிறேன். நாங்களெல்லோரும் தங்குவதற்குச் சுத்தமான காற்று, தண்ணீர், கக்கூசு முதலிய சௌகரியங்கள் உள்ள கட்டிடம் ஒன்று 4 நாளைக்கு வேண்டும். அந்தக் கட்டிடத்தில் எங்களைத் தவிர வேறு மனிதர்கள் தங்கச் சௌகரியப்படாது. எங்களுடன் சமயக்காரன் வருகிறான். அந்தக் கட்டிடத்திலேயே நாங்கள் சமையல் சாப்பாடு வைத்துக் கொள்ள வேண்டும். அப்படிக் கட்டிடம் ஒன்று பார்த்துச் சாவி வாங்கி எனக்குத் தகவல் கொடுங்கள். 29--10--27 முதல் 2--11--27 வரையில் நாங்கள் அங்குத் தங்க உத்தேசம்.

அவ்விடத்தில் காலரா வியாதி நடமாடுவதாகப் பிரஸ்தாபம் கேள்விப்பட்டேன். அது வாஸ்தவமா? இப்போது காலரா அவ்விடத்தில் உண்டா? பூரணமாக நின்று விட்டதா? என்ற விவரத்தையும் தெரிவித்தருள்க.

(ஒம்) வ.உ.சிதம்பரம்.

மகாக்கனம் பொருந்தியமாமா
மகாளஸ்ரீ கு.ஞானதேசிகம் பிள்ளையவர்கள்
சமுகத்துக்கு,

பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

கோவிற்பட்டி,
25-10-27

சுவாமியவர்கள் ஸ்ரீபாத பொற்கமலங்களில் அடியேன் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்திற்குப் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் 19-10-27 கார்டு வரப் பெற்றேன். அதில் மைனர் சூட்டு மைனர்களுக்கு அனுகூலமாகிவிட்டதென்று எழுதியிருக்கிறீர்கள். வகீல் கணபதியாப் பிள்ளையவர்கள் 3 சூட்டுகளில் 2 மைனர்களுக்கு அனுகூலமாக முடியவில்லை யென்றும் 3வது சூட்டு நவம்பர் மாதம் 1ந்தேதிக்குள் வாயுதாப் போடப்பட்டிருக்கின்றதென்றும், அதுவும் அனுகூல மாகாதென்றும், எழுதியிருக்கிறார்களே. இருவர் கடிதங்களும் ஒன்றுக்கொன்று மாறுகச் சமாசாரத்தைத் தெரிவிப்பதற்குக் காரணம் தெரியவில்லை.

29-10-27 மாலையில் அல்லது காலையில் நாங்கள் எல்லோரும் அங்கு வருவோம். காலையா, மாலையா, நாங்கள் வருவோமென்பதைப் பின்னர்த் தெரியப்படுத்துவேன்.

(ஒம்) வ.உ.சிதம்பரம்

மகாக்கனம் பொருந்திய மாமா
மகாளஸ்ரீ கு. ஞானதேசிகம் பிள்ளையவர்கள்
சமூகத்துக்கு,
பள்ளத் தெரு,
திருச்செந்தூர்.

கோவிற்பட்டி,
10-12-27.

சுவாமியவர்கள் சமுகத்துக்குச் சிதம்பரம் விண்ணப்பம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் 7-12-27 கார்டு கிடைத்தது. அப்பீல் பெற்றிஷன் தாக்கலாய் விட்டது. ஆனால், ஈங்கி வாயுதாத் தெரியவில்லை. அது தெரிந்தவுடன் சுவாமியவர்களுக்குத் தெரிவிக்கிறன்.

எனது மைத்துனமார்களுடைய பாகச் சொத்துக்கள் கமிஷனரால் பிரித்து விடப்பட்டனவா? நமக்கு அனுகூலமாக முடிந்த நம்பர்களின் பேரில் என்ன நடவடிக்கைகள் நடந்திருக்கின்றன? அப்பீலுக்கு 19-12-27ல் தூத்துக்குடியில் வாயுதாப் போட்டு நோட்டீஸ் இப்போது வந்து விட்டது. பீஸ்கும் செலவுக்கும் பணம் அனுப்பும்படி வேண்டுகிறேன்.

(ஒம்) வ.உ. சிதம்பரம்.

-----

கோவிற்பட்டி,
20--8--'28.

சுவாமியவர்கள் திவ்விய பாதங்களில் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன்.

சுவாமியவர்கள் 12--8--28 கார்டு வரப்பெற்றேன். தாங்கள் இங்கு வந்து சில நாள்களாவது தங்க வேண்டுமென்று நாங்களெல்லாரும் விரும்பிக் கொண்டிருக்கிறோம்.

மகராசி நம்பர் ரிக்கார்டுகள் என்னிடம்தான் இருக்கின்றன. தங்கள் தமையனாரவர்களின் மகள் பிள்ளை பேரன் நடவடிக்கை நடத்தவும், தாயாதிகள் நடவடிக்கை நடத்தவும் காலாவதியாகிவிட்டதே. இனிமேல் என்ன ஆலோசனை செய்யப் போகிறீர்கள்!

தாழ்மையுள்ள,

(ஒம்) வ.உ. சிதம்ரபம்.

அய்யர் கடனுக்குச் சில சொத்துக்களை விரைந்து விற்க வேண்டும். அதற்குரிய முயற்சி செய்யப் பிரார்த்திக்கிறேன்.

சென்னை தண்டபாணி பிள்ளை அவ்விடத்திற்கு வந்தாரா!

(ஒம்) வ.உ.சி.

மகாக்கனம் பொருந்திய மாமா
மகாளஸ்ரீ கு. ஞானதேசிகம் பிள்ளையவர்கள்,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

கோவிற்பட்டி,
14--6--'28.

சுவாமியவர்கள் சமுகத்துக்குச் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன்.

சௌபாக்கியவதி மீனுச்சி சென்ற திங்கட்கிழமைக் காலை 8 மணிக்கு ஆண் குழந்தை பெற்றுள். தாயும் குழந்தையும் சௌக்கியமாயிருக்கின்றனர். பூரட்டாதி நக்ஷத்திரம்.

தூத்துக்குடி வக்கீல் கணபதியப்ப பிள்ளையவர்கள் சென்ற ஞாயிற்றுக் கிழமை அங்கிருந்து பட்டணம் போவதாகச் சொன்னுர்கள். தங்கள் அப்பீல் ரிக்கார்டுகள் கொண்டு போகிறீர்களா என்று கேட்டேன். இல்லையென்றுர்கள். சீக்கிரமாக அப்பீல் பெற்றிஷன் டிராப்டுத் தயார் செய்து ரிக்கார்டுகளுடன் எனக்கு அனுப்பும்படி செய்தால், நான் சாதாரணமாகப் பட்டணம் போய்ச் சரியான வக்கீலைக் கண்டு பேசி அசல் அப்பீல் பெற்றிஷன் தயார் செய்து கொடுத்துவிட்டு வருவேன். கோர்ட்டுப் பீஸ் பணம் முதலியவற்றைக் கோர்ட்டுத் திறப்பதற்கு ஒரு வாரத்திற்குமுன் அனுப்பலாம். கணபதியப்ப பிள்ளையவர்கள் வருகிற ஞாயிற்றுக் கிழமை பட்டணமிருந்து வருகிறுர்கள். உடனே ஆள் அனுப்பி அப்பீல் பெற்றிஷன் டிராப்டுத் தயார் செய்து ரிக்கார்டுகளுடன் இங்கு அனுப்பும்படி செய்க.

(ஒம்) வ.உ.சிதம்பரம்.

மகாகனம் பொருந்திய மாமா
கு. ஞானதேசிகம் பிள்ளையவர்கள் சமுகத்திற்கு,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

கோவில்பட்டி,
6--8--1928.

சுவாமியவர்கள் சமுகத்திற்குச் சிதம்பரம் நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன். தங்கள் 4--8--28 கார்டு வரப்பெற்றுப் பார்த்து, வக்கீலுக்கு ரூ 200-ம் அனுப்பி முடிந்த விவரம் தெரிந்து, சந்தோஷம் அடைந்தேன். தாங்கள் இந்தச் சமயம் ரூ 500 தயார் செய்தது கடவுள் செயல்தான் என்று சொல்லவேண்டும். இது சாதாரண மனிதர்களால் முடிக்கக்கூடிய காரியமன்று.

அப்பீல் நம் பக்கம் அநுகூலம் ஆகுமென்றே நாங்க ளெல்லோரும் நம்புகிறோம். ஈரங்கி வாயுதா ஏற்படப் பல மாதங்கள் செல்லும். அவசியமானால் ஈரங்கி சமயத்தில் நான் சென்னை போகிறேன்.

கீழ்க் கோர்ட்டுத் தீர்ப்பை நிறைவேற்றாமல் நிறுத்தி வைக்கும்படி பெற்றிஷன் தாக்கல் செய்து உத்தரவு வாங்கும்படி இன்று வக்கீலுக்கு எழுதியிருக்கிறேன்.

அய்யர் டிக்கிரிக் கணக்கைத் தீர்ப்பதற்குக் கொஞ்சம் பனங்காட்டை விற்பதற்கு வேண்டும் முயற்சி செய்யும்படி பிரார்த்திக்கிறேன்.

(ஓம்) வ.உ.சிதம்பரம்.

மகாக்கனம் பொருந்திய மாமா
மகாளளஸ்ரீ கு.ஞானதேசிகம் பிள்ளையவர்கள்
சமுகத்துக்கு,

பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.
---------

கோவிற்பட்டி,
20--8--'28.

சுவாமியவர்கள் திவ்விய பாதங்களில் சிதம்பரம் நமஸ்காரம்.
க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன்.

சுவாமியவர்கள் 12--8--28 கார்டு வரப் பெற்றேன். தாங்கள் இங்கு வந்து சில நாள்களாவது தங்க வேண்டுமென்று நாங்களெல்லாம் விரும்பிக் கொண்டிருக்கிறோம்.

மகராசி நம்பர் ரிக்கார்டுகள் என்னிடம்தான் இருக்கின்றன. தங்கள் தமயனாரவர்களின் மகள் பிள்ளை பேரன் நடவடிக்கை நடத்தவும், தாயாதிகள் நடவடிக்கை நடத்தவும் காலாவதியாகி விட்டதே இனிமேல் என்ன ஆலோசனை செய்யப் போகிறீர்கள்?

தாழ்மையுள்ள,

(ஒம்) வ.உ.சிதம்பரம்.

அய்யர் கடனுக்குச் சில சொத்துக்களை விரைந்து விற்க வேண்டும். அதற்குரிய முயற்சி செய்யப் பிரார்த்திக்கிறேன்.

(ஒம்) வ.உ.சிதம்பரம்.

சென்னை தண்டபாணி பிள்ளை அவ்விடத்திற்கு வந்தாரா?

வ.உ.சி.

மகாகக்கனம் பொருந்திய மாமா
மகாளஸ்ரீ கு. ஞானதேசிகம் பிள்ளையவர்கள்,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

கோவிற்பட்டி,
1---6---29.

சுவாமியவர்கள் திவ்விய பாதங்களில் அடியேன் சிதம்பரம் அனேக நமஸ்காரம். க்ஷேமம். க்ஷேமத்துக்குப் பிரார்த்திக்கிறேன்.

சுவாமியவர்கள் கார்டு வரப்பெற்றேன். நம்முடைய பணஞ் சொத்தைத் தேவஸ்தானக்கு வாங்குகிற விஷயமாகக் குறிப்பிட்ட மனுஷர்களிடம் பேசியிருக்கிறேன். இன்னமும் பேசுகிறேன்.

சிரஞ்சீவி வெங்கையாவும் சாமியாரவர்களும் இன்னமும் இங்கு வரவில்லை. ஒவ்வொரு டிரெய்னிலும் அவர்கள் வரவை எதிர் பார்த்திருக்கிறோம்.

இதனுடன் புக் போஸ்டில் திருமணப் பத்திரிகை 12 வருகின்றன. சுவாமியவர்களுக்கு 1, மாப்பிள்ளை சிரஞ்சீவி ஞா. சிவசுப்பிரமணிய பிள்ளைக்கு 1, மாப்பிள்ளை சிரஞ்சீவி சங்கரம் பிள்ளைக்கு 1, மேலத்தெரு தம்பி ச. சுப்பையா பிள்ளைக்கு 1, மற்றைய நமது பந்துக்களுக்கு. மற்றவை விலாசம் எழுதுவித்து உடனே கொடுத்துக் கலியாணத்துக்கு எல்லோரும் குடும்ப சகிதம் வந்து சேரும்படி செய்யப் பிரார்த்திக்கிறேன். சுவாமியவர்கள் முதலானவர்கள் முன்னர்க் கூட்டியே வந்து சேர பிரார்த்திக்கிறேன்.

தாழ்மையுள்ள,

(ஒம்) வ.உ. சிதம்பரம்.

மகாக்கனம் பொருந்திய மாமா,
மகாளள ஸ்ரீ கு.ஞானதேசிகம் பிள்ளையவர்கள் சமுகம்,
பள்ளத்தெரு,
திருச்செந்தூர்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை,
வக்கீல்.

69, கீழரதவீதி, மேலூர்,
தூத்துக்குடி
14--1--1933.

அன்பார்ந்த சகோதரரவர்களே,

தாங்கள் 9--1--33ல் எழுதியனுப்பிய இங்கிலீஷ் கடிதம் வரப்பெற்றேன். எனது விருத்தாப்பியத்தாலும், வேலை மிகுதியாலும் நான் அயல் இடங்களுக்கு உபந்நியாசம் செய்யப் போவதை நிறுத்தி விட்டேன். ஆயினும், தாங்களும் நமது அருமை நண்பர் கே.எஸ். பிள்ளையவர்களும் நான் 31--1--33ல் அவ்விடம் வந்து ஓர் உபந்நியாசம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறபடியால், நான் தங்கள் விருப்பப்படி செய்யச் சித்தமாயிருக்கிறேன். எனது உபந்நியாச விஷயம் "திருவள்ளுவர் திருக்குறள்" என்று குறித்துக் கொள்ளுங்கள்.

நமது அருமை நண்பர் பண்டிதமணி திரு மு. கதிரேசன் செட்டியாரவர்களுக்கு நான் 31--1--33 மாலையில் அங்கு அவர்கள் தலைமையின் கீழ் "திருவள்ளுவர் திருக்குறள்" என்னும் பொருள்பற்றிப் பேச ஒப்புக் கொண்டிருக்கிறதாகவும், அவர்கள் தலைமை வகிக்க வரமுடியவில்லையென்று தந்தி கொடுப்பதாயிருந்தால் அவ்வாறே நானும் தந்தி கொடுத்து விடுவேன் என்று தங்களுக்கு எழுதியிருப்பதாகத் தெரிவியுங்கள்.

அன்புள்ள,
(ஒம்) வ.உ. சிதம்பரம் பிள்ளை.

வ.உ.சிதம்பரம் பிள்ளை,
வக்கீல்.

53-57, தெற்கு ரத வீதி,
மேலவூர், தூத்துக்குடி,

10-3-1933

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் 2-3-33 திங்கள் தினம் எழுதியனுப்பிய கார்டு வந்து சேர்ந்தது.

நான் பிரசுரித்திருக்கிற "இன்னிலை"யைத் தாங்கள்பிரசுரிக்கும் "பதினெண் கீழ்க் கணக்கு" நூல்களோடு சேர்த்துப் பிரசுரித்துக் கொள்ளும்படியாகத் தங்களுக்கு இதன் மூலமாக அநுமதி கொடுத்திருக்கிறேன்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல் மூலங்களடங்கிய தங்கள் பதிப்பு நூற்கு முன்னுரை எழுதுவதாயிருப்பின் நான் "இன்னிலை" இரண்டாம் பதிப்பை வெளியிட்டபின்னர்த் தஞ்சையிலிருந்து திரு. எச். வையாபுரிப் பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்கள் மூலமாக ஒரு கையெழுத்துப் பிரதி கிடைத்திருக்கிறதாகவும், அந்நூலை அநுவயம், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரைகளுடன் வெளியிட்டிருக்கிறதாக அதில் குறிக்கும்படி தயவு செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அன்புள்ள

(ஒம்) வ.உ.சிதம்பரம் பிள்ளை

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்.
6, பவளக்காரத் தெரு,
சென்னை.

உ

வ.ஊ. சிதம்பரம் பிள்ளை,
வக்கீல்

53-57, தெற்குரத வீதி,
மேலவூர், தூத்துக்குடி,
8--9--1933.

சகோதரியே,

நான் இன்று திருச்செந்தூருக்கு வரக் கூடுமென்று மணியாச்சியில் வைத்து உன்னிடம் சொன்னேன். ஆனால், இன்றும் எனக்கு இங்கு வேலை யிருக்கிறது; இன்னும் சில நாள்களுக்கும் எனக்கு இங்கு வேலை யிருக்கிறது. அதனால் நான் சமீப காலத்தில் அங்கு வர முடியாதென்று தெரிகிறது. நீயும், அம்மையும், குழந்தையும் திருச்செந்தூரில் சுவாமி தரிசனம் செய்து கொண்டு குற்றாலம் முதலிய இடங்களுக்குப் போய்விட்டுக் கோயமுத்தூருக்குப் போகும் வழியில் இங்கு வந்துவிட்டுப் போங்கள். அவசியமான போது எனக்குக் கடிதம் எழுது.

(ஒம்) வ.உ. சிதம்பரம் பிள்ளை

திருச்செந்தூர் பள்ளத் தெருவில்மாப்பிள்ளை
ஞா. சுப்பிரமணிய பிள்ளை மேல்பார்த்துக்
கோயமுத்தூர் ஸ்ரீமதி சுப்பம்மாளுக்குக்
கொடுப்பது, திருச்செந்தூர்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை,<br>வக்கீல்.

தூத்துக்குடி,<br>1---6---1935.

அன்புள்ள மைத்துனா,

கேஷமம். கேஷமத்திற்கு எழுது. உன் கடிதங்களெல்லாம் வந்தன. என் கையில் ரூபா இல்லை. கனம் முதலாளியவர்களிடம் ரூபா கேட்க வெட்கமாயிருக்கிறது. நானும் வெங்கும் ஜூன் மீ 11 உ மாலையில் அல்லது ஜூன் மீ 12-உ காலையில் குலசேகரப்பட்டணம் போவதற்கு அங்கு வருவோம். அப்போது ரூபா கொண்டு வருகிறேன்.

அன்புள்ள,<br>(ஒம்) வ.உ.சிதம்பரம் பிள்ளை.

மாப்பிள்ளை சிரஞ்சீவி ஞா.சுப்பிரமணிய பிள்ளை,<br>பள்ளத்தெரு,<br>திருச்செந்தூர்.

வ.உ.சிதம்பரம் பிள்ளை,
வக்கீல்.

தூத்துக்குடி,
4--6--1935.

To
M.R.Ry. V.Thiruvarangam Pillai Avargal,
Secretary,
The South India Saiva Siddantha Works
Publishing Society, Tinnevelly, Limited.,
East Car Street,
Tinnevelly Town.

Dear Sir,

Your card of the 2nd instant. I have reduced the price of " அகமே புறம்" and "மெய்யறம்" as Annas four per copy, of course I allow 25 per cent commission even in that reduced price. I have got a limited number of copies. So, I cannot send you those books with a condition to take back unsold copies. But I can wait to receive the price of the books less your commission till 15-7-35. Please let me know by next post how many copies you require in each of the two. The train fare you ought to bear, because I have reduced the price to half of that mentioned in them and I allow 25 per cent commission. On hearing from you, the books will be despatched.

Yours sincerely,

Sd/- V.O. Chidambaram Pillai

V.O. Chidambaram Pillai,
Pleader.

Tuticorin.
12--9--1935.

அன்பார்ந்த நண்பரவர்களே,

தங்கள் "புதுமனை குடிபுகும் விழா அழைப்பு"க்கள் வரப்பெற்றேன். விழாவின் பிற்பகுதிக்கு நான் வந்து சேருவேன். ஒவ்வொரு காலையிலும் மணி 7 முதல் 9 வரையிலும் இவ்விடம் கீழலூர் மகாளளஸ்ரீ அ.செ.சு. கந்தசுவாமி ரெட்டியாரவர்கள் வீட்டில் மதுரை ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடத்தின் தற்கால அதிபதி ஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள் துறவிகளும் இல்வாருமாகிய 25 பேர்களுக்கு "ஞானவாசிட்டம்" சொல்லி வருகிறார்கள். அவ்விருபத்தைந்து பேர்களில் நான் ஒருவன். ஆதலால், விழாவின் முற்பகுதிக்கு நான் வர இயலாதவனாயிருக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் அருளால் விழா சிறப்பாக நடைபெறும். நான் அங்கு வந்த பின்னர் நேரிலும் தங்களுக்கு என் வாழ்த்தைச் சமர்ப்பிப்பேன். நமது அருமை நண்பர் "பண்டிதமணி" அவர்களுக்கும் ஏனைய புலவர்களுக்கும் நான் விழாத்தினம் மாலை 4 மணிக்கு முன்னர் அங்கு அவர்களைத் தரிசிப்பேன் என்று சொல்லுக.

தங்கள் அருமை மகளும், தேச பக்த சிரோன்மணியாகிய திரு எல். கிருஷ்ணசாமி பாரதியாரவர்கள் மனைவியுமாகிய ஸ்ரீமதி இலக்குமி அம்மாளை இங்குக் கண்டேன்; க்ஷேமம் வினவினேன். என் மனைவி மக்களை அறிமுகம் செய்து வைத்தேன். அவ்விருவரையும் விழாத்தினத்தில் அங்குக் காணும் பாக்கியம் பெறுவேனென்று நம்புகிறேன்.

கடவுள் துணை.

அன்புள்ள,

(ஒம்) வ.உ.சிதம்பரம்.

...2.

சிவஞான போதத்திற்கு ஓர் உரை எழுதி "தினமணி" வருஉ அனுபந்தத்திற்கு அனுப்பியுள்ளேன். ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைக் கண்டித்தால், சைவர் பலர் மனம் நோகுமென்று கருதி அது செய்யாது விடுத்துள்ளேன். என் உரை சுவாமிகள் உரைக்குப் பல இடங்களில் வேறுபட்டும் மாறுபட்டுமுள்ளது. இதற்கும் போலிச் சைவர் குழாம் என்னை நிந்தித்தல் கூடும். அந்நிந்தனையை வந்தனையாகவே கொள்ளும் மனநிலையுடையேன் யான் தற்காலம். கடவுள் துணை.

வ.உ.சி.

V.O.CHIDAMBARAM PILLAI
PLEADER

TUTICORIN
5 - 4- 1936.

ஸ்ரீ ச. வெ. சுப்பிரமணிய பிள்ளை

அன்பார்ந்த தம்பியவர்களே,

தாங்கள் சங்கரன்கோவிலிலிருந்து எழுதியனுப்பிய கடிதத்தால், தங்களுக்கு அருமை மகன் பிறந்திருப்பதும், அவனுக்கு நம் தந்தையவர்கள் பெயரிட்டிருப்பதும் தெரிந்து பெரிது மகிழ்ந்தோம் நானும், தங்கள் மதினியும்.

நான்கு நெறியிலிருந்து திருத்தப்பட்ட புரூவுடன் குறள் சம்பந்தமாகச் சில குறிப்புக்களும் விளக்கமும் எழுதியனுப்பியிருந்ததைப் பார்த்து அன்றுமுதல் இன்று வரையில் பேரானந்தம் அடைகின்றேன். "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்னும் பழமொழியைப் பன்முறை கேட்டுள்ள நான் "அறிவுடைய தம்பியையுடையான் யார்க்கும் அஞ்சான்" என்று உணர்கின்றேன். இத்திருக்குறளைப் பற்றி எப்புலவரும் எவ்வகையான குற்றமும் சொல்ல முடியாது என்று உணர்கின்றேன். வெறும் எழுத்துப் பிழை, அடையாளப்பிழைகளைமாத்திரம் திருத்துவதில் எனக்குத் திருப்தியில்லை. தாங்கள் எடுத்துக் காட்டிய பிழைகளைத் திருத்துவதுதான் எனக்குத் திருப்தி. தங்கள் குறிப்புப்படியே முந்திய பாரத்தில் எல்லாத் திருத்தங்களும் செய்துள்ளேன். தங்கள் பெயரைத் தமிழுலகம் போற்றும்படியாகத் தங்கள் நன்றியை எடுத்து எழுதுவேன்.

ஸ்ரீ வைகுண்டம் Coronation High School இல் ஒரு தமிழ்ப் பண்டிதர் தேவை. வித்வான் பரீக்ஷை தேறியவராயும், சிறிதாவது இங்கிலீஷ் தெரிந்தவராயும் இருத்தல் வேண்டும். ஆரம்பச் சம்பளம் ரூ 25. சம்பளக் குறைவுக்குக் காரணம் சமஸ்கிருத பண்டிதருக்குச் சம்பளம் ரூ 25. அன்றியும் சில காரணங்களால் முக்கியமாக அங்கு ஒரு இலவசப் பிரதமப்

பாடசாலை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் வரும்படி குறைந்திருக்கிறது. தங்களுக்குத் தெரிந்த பிராமணரல்லாதாரை To The President, Managing Committee, Coronation High School, Srivaikuntam. என்னும் விலாசத்துக்கு உடனே மனுச் செய்யும்படி தூண்டுக.
கடவுள் துணை.

ஒரு வாரமாகச் சுரத்தால் வருந்தி இன்றுதான் மீண்டேன்.

அன்புள்ள,

(ஒம்) வ.உ.சிதம்பரம்.